## May 21, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. முதல்வர் விஜய் தலைமையிலான தமிழக அமைச்சரவை விரிவாக்கம் செய்யப்படுகிறது. ஆளுநர் மாளிகையில் காலை 10 மணிக்கு புதிய அமைச்சர்கள் பதவியேற்பு விழா நடைபெறவுள்ளது. தவெக எம்எல்ஏக்கள், கூட்டணி கட்சியான காங்கிரஸ் எம்எல்ஏக்கள் ராஜேஷ்குமார், பெ. விஸ்வநாதன் ஆகியோருக்கு ஆளுநர் ஆர்.வி. ஆர்லேகர் அமைச்சர்களாக பதவிப் பிரமாணம் செய்து வைக்கிறார். தவெக அரசு அமைந்த 10 நாள்களுக்கு பிறகு நடைபெறும் முதல் அமைச்சரவை விரிவாக்கம் இதுவாகும்.

(i) தமிழகத்தில் முதல்முறையாக கூட்டணி அரசு

- தமிழக அரசியல் வரலாற்றில் முதல்முறையாக கூட்டணி அரசு அமைந்துள்ளது. அதாவது முதல்முறையாக அரசுக்கு ஆதரவு அளிக்கும் கட்சிக்கு அமைச்சரவையில் இடம் வழங்கப்பட்டுள்ளது.
- இதற்கு முன்பு தமிழகத்தில் தனியொரு கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்காமல் கூட்டணிக் கட்சிகளின் ஆதரவுடன் ஆட்சி அமைந்துள்ளது. எனினும், கூட்டணிக் கட்சிகளுக்கு அமைச்சரவையில் இடம் அளிக்கப்பட்டது இல்லை. இப்போதுதான் முதல்முறையாக அரசுக்கு ஆதரவு அளிக்கும் கட்சி (காங்கிரஸ்) அமைச்சரவையில் இடம் பெறவுள்ளது. மறைந்த முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் 35-ஆவது நினைவு நாளில் (மே 21) இது நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

(ii) எத்தனை பேர் அமைச்சர்களாக இருக்கலாம்?

- இந்திய அரசமைப்புச் சட்டம் 164 (1ஏ) பிரிவின்படி, சட்டப் பேரவையின் மொத்த எண்ணிக்கையில் 15 சதவீதம் பேர் அமைச்சர்களாக இருக்கலாம். அந்த வகையில், 234 உறுப்பினர்களைக் கொண்ட தமிழக சட்டப்பேரவையில் 35 பேர் அமைச்சர்களாக இருக்க வரம்பு உள்ளது.

2. உலக விவகாரங்களில் சில நாடுகள் காலனி ஆதிக்க மனப்பான்மையுடன் ஏகபோக உரிமை கொண்டாட முயன்று தோற்றுள்ளது. அதேநேரம், சர்வதேச சமூகம் பிளவு பட்டுள்ளதால் உலகில் மீண்டும் காட்டாட்சி அமலுக்கு வரும் அபாயம் உள்ளது என ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் மற்றும் சீன அதிபர் ஷி ஜின்பிங் கூட்டறிக்கையில் கவலை தெரிவித்தனர்.

(i) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் சீன பயணம் மேற்கொண்ட ஒரு வாரகால ரஷிய இடைவெளியிலேயே, அதிபர் புதினும் 2 நான்கள் அரசு முறைப் பயணமாக சீனாவுக்கு வருகை தந்தார்.

(ii) தலைவர்களின் இந்நிலையில், சீன தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள கிரேட் ஹால் ஆஃப் பீப்பின் அரங்கில் இருதரப்பு சந்திப்பு நடைபெற்றது. சந்திப்புக்காக வந்த புதினுக்கு ஷி ஜின்பிங் முழுராணுவமரியாதையுடன் உற்சாக வரவேற்பு அளித்தார்.

(iii) பின்னர், இரு தலைவர்களும் சுலாசார மற்றும் அரசியல் உறவுகளை மேம்படுத்துவது குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர். ஏ.ஐ. முதல் வனவிலங்கு பாதுகாப்பு வரை பல்வேறு துறைகளில் இணைந்து செயல்படவும் இருதரப்பும் ஒப்புக்கொண்டன. சந்திப்பைத் தொடர்ந்து, அமெரிக்காவாவின் அணுகுமுறையை மறைமுகமாகத் தாக்கி இரு தலைவர்களும் கூட்டறிக்கையை வெளியிட்டனர்.

(iv) அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப்பின் ‘கோல்டன் டோம்' ஏவுகணை தடுப்புத் திட்டம் மற்றும் அணுசக்தி கொள்கைகளையும் தனது கூட்டறிக்கையில் ரஷியாவும் சீனாவும் கடுமையாகச் சாடின. உலகளாவிய நிலைத்தன்மைக்கு அமெரிக்காவின் இச்செயல் அச்சுறுத்தலாக உள்ளதாக அவர்கள் எச்சரித்தனர்.

(v) ரஷியாவுடனான அணுசக்தி ஆயுதக் குறைப்பு ஒப்பந்தத்தை டிரம்ப் நிர்வாகம் புதுப்பிக்கத் தவறியதையும், அதன்மூலம் சர்வதேச பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தியதையும் இரு வரும் சுட்டிக்காட்டினர். ஈரானுடனான விவகாரம் உள்ளிட்ட சர்வதேச பிரச்னைகளில் அமெரிக்காவின் தலையீட்டைக் கண்டித்த இரு தலைவர்களும், சர்வதேச சட்டங்களை அமெரிக்காவும் இஸ்ரேலும் மீறுவதாகச் சாடினர்.

(vi) எரிவாயு குழாய்த் திட்டத்தில் உடன்பாடில்லை:

- இரு நாடுகளுக்கும் இடையே 'எல்லைகளற்ற' நட்பு இருப்பதாகக் குறிப்பிட்டாலும், எரிசக்தி துறையில் ரஷியா பெரிதும் எதிர்பார்த்த பிரம்மாண்டமான எரிவாயு ஒப்பந்தம் இச்சந்திப்பில் கையொப்பமாகவில்லை.

- 'பவர் ஆஃப் சைபீரியா-2' எரிவாயு குழாய்த் திட்டம் மூலம் சீனாவுக்கு எரிவாயுவை ஏற்றுமதி செய்ய ரஷியா நீண்டகாலமாக முயற்சி செய்து வருகிறது. இத்திட்டம் தொடர்பாக ரஷியாவுடன் பொதுவான உடன்பாடு எட்டப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டாலும், விலை நிர்ணயம் மற்றும் ஒப்பந்த நிபந்தனைகளில் இரு தரப்புக்கும் இடையே இன்னும் பெரிய அளவிலான முரண்பாடுகள் நிலவுவதாகத் தெரிகிறது.

3. நேபாள தலைநகர் காத்மாண்டுவில் பாகமதி நதிக்கரை மற்றும் பொது இடங்களில் அகற்றப்பட்ட ஆக்கிரமிப்புகளில் வசித்து வந்த நிலமற்ற குடியேறிகளுக்கு அந்நாட்டு அரசு நிவாரணம் அறிவித்துள்ளது.

(i) பிரதமர் பாலேந்திர ஷா தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின்படி, ஆக்கிரமிப்புகளில் இருந்து வெளியேற்றப்பட்ட குடும்பங்களுக்குத் தற்காலிக தங்குமிட செலவாக அடுத்த 3 மாதங்களுக்கு மாதந்தோறும் ரூ.15,000 வழங்கப்படும். விவரங்களின் சரிபார்ப்புக்கு பிறகு, மறுவாழ்வுக்காக ஒருமுறை மட்டும் ரூ.25,000 வழங்கப்படும்.

(ii) கடந்த மாதம் தொடங்கிய இந்த ஆக்கிரமிப்பு அகற்றும் நடவடிக்கையால், சுமார் 2,600 குடும்பங்களைச் சேர்ந்த 15,000 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளனர். இவ்விவகாரம் அந்நாட்டு உச்சநீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வருகிறது.

4. ஹாக்கி பயிற்சியாளர் பல்தேவ் சிங்குக்கு குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு, வரும் 25-ஆம் தேதி பத்ம ஸ்ரீ விருது வழங்கி கௌரவிக்க இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

5.இந்தியா - நியூஸிலாந்து இடையேயான விளையாட்டு ஒத்துழைப்பின் நூற்றாண்டைக் கொண்டாடும் வகையில், இரு நாடுகளின் ரக்பி விளையாட்டு தேசிய சம்மேளனங்கள் பங்கேற்கும் உயர் செயல்திறன் பயிற்சி முகாம் வியாழக்கிழமை முதல் இரு நாள்களுக்கு புவனேசுவரத்தில் நடை பெறவுள்ளது.

6. மேற்கு வங்கத்தில் இந்திய-வங்கதேச எல்லையில் வேலி அமைப்பதற்காக நீண்ட காலமாக நிலுவையில் இருந்த 25 கி.மீ. நிலப்பரப்பை எல்லை பாதுகாப்புப் படைக்கு முதல்வர் சுவேந்து அதிகாரி ஒதுக்கினார். அத்துடன், சட்டவிரோத ஊடுருவல்காரர்கள் இனி நேரடியாக எல்லை பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைக்கப்படுவர் என்ற அதிரடி அறிவிப்பையும் அவர் வெளியிட்டார்.

7. நிகழாண்டு இந்திய பொருளாதார வளர்ச்சி 6.4 சதவீதமாக இருக்கும் என்று ஐ.நா. கணித்துள்ளது. இந்த வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கும் என்று ஐ.நா. முன்பு கணித்திருந்த நிலையில், தற்போது அது குறைக்கப்பட்டுள்ளது. ஐ.நா.வின் இது தொடர்பாக பொருளாதார மற்றும் சமூக விவகாரங்கள் துறை வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

(i) அமெரிக்கா-ஈரான் மோதலால் ஏற்பட்டுள்ள மேற்காசிய நெருக்கடி, உலகப் பொருளாதாரத்துக்கு மற்றொரு அதிர்ச்சியை அளித்துள்ளது.

(ii) இது வளர்ச்சியை மந்தமாக்கி, பணவீக்கத்தின் அழுத்தத்தை மீண்டும் உருவாக்கி, நிச்சயமற்றத் தன்மையை மேலும் அதிகரிக்கும்.

(iii) எனினும் உலகில் வேகமாக வள ரும் முக்கிய பொருளாதாரங்களில் ஒன்றாக இந்திய பொருளாதாரம் உள்ளது.

(iv) கடந்த ஆண்டு இந்திய பொருளாதார வளர்ச்சி 7.5 சதவீதமாக இருந்த நிலையில், நிகழாண்டு இந்திய பொருளாதாரம் 6.4 சதவீதம் வளரும். அடுத்த ஆண்டு இந்த வளர்ச்சி 6.6 சதவீதமாக இருக்கும்.

(v) அதேவேளையில், நிகழாண்டு உலகப் பொருளாதார வளர்ச்சி 2.5 சதவீதமாக இருக்கும். இது கடந்த ஜனவரியில் கணிக்கப்பட்டதை விட 0.2 சதவீதம் குறைவு என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. 125 நாள் வேலைத் திட்டத்துக்கு ஏற்கெனவே 25 மாநிலங்கள் நிதி ஒதுக்கிவிட்டதாக நாடாளுமன்ற நிலைக் குழுவிடம் மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

(i) மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதியளிப்பு (100 நாள் வேலைத் திட்டம்) சட்டத்துக்கு மாற்றாக, விபி-ஜிராம்ஜி (125 நாள் வேலைத் திட்டம்) மசோதா கடந்த ஆண்டு டிசம்பரில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு ஒப்புதல் அளித்ததைத் தொடர்ந்து, அந்த மசோதா சட்டமானது.

(iii) இந்தப் புதிய சட்டத்தின்படி, 100 நாள் வேலைத் திட்டம் 125 நாள்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது; சட்டப்பேரவைகள்

உள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் இந்தத் திட்டத்துக்கான நிதியில் மத்திய அரசு 60 சதவீதத்தையும், மாநில மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் 40 சதவீதத்தையும் ஏற்கும்; வடகிழக்கு மாநிலங்கள் மற்றும் இமயமலைப் பகுதியில் உள்ள உத்தரகண்ட், ஹிமாசல பிரதேச மற்றும் ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் திட்டத்துக்கான நிதியில் மத்திய அரசு 90 சதவீதத்தையும், மாநில அரசுகள் 10 சதவீதத்தையும் ஏற்கும்.

(iv) இந்நிலையில், புது தில்லியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கான நாடாளுமன்ற நிலைக் குழு கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது. காங்கிரஸ் எம்.பி. சப்தகிரி உலகா தலைமையிலான அந்தக் குழுவிடம், 125 நாள் வேலைத் திட்டம் அமல்படுத்தப்படுவது குறித்து மத்திய ஊரக மேம்பாட்டு அமைச்சக செயலர் ரோஹித் கன்சல் விளக்கம் அளித்தார்.

(v) அப்போது அவர் கூறுகையில், 'ஜூலை 1 முதல் 125 நாள் வேலைத் திட்டம் அமல்படுத்தப்படும். அந்தத் திட்டத்துக்கு ஏற்கெனவே 25 மாநிலங்கள் நிதி ஒதுக்கியுள்ளன. அந்தத் திட்டத்துக்கான அனைத்து நிர்வாக மற்றும் கொள்கை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன' என்று கூறியதாகத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

(vi) அந்த வட்டாரங்கள் மேலும் கூறுகையில், '100 நாள் வேலைத் திட்டத்துக்கு அளிக்கப்பட்ட பணி அட்டைகளுக்கு மாற்றாக, 125 நாள் வேலைத் திட்டத்துக்கு புதிய ஸ்மார்ட் பணி அட்டைகள் அளிக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமையை உறுதி செய்யும் வகையில், இந்தப் பணி அட்டைகளில் முகத்தை வைத்து அடையாளம் காணும் சிறப்பம்சம் இடம்பெறும்' என்று தெரிவித்தன.

(vii) மத்திய அரசின் பங்கு ரூ.95,692 கோடி:

- இந்தத் திட்டத்துக்கான ஊதியம், வேலை செய்யத் தேவைப்படும் பொருள்கள், நிர்வாக கருவிகள் என ஆண்டுதோறும் ரூ.1.51 லட்சம் கோடி தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் மாநில அரசுகளின் பங்கும் அடங்கும். ரூ.1.51 லட்சம் கோடியில் மத்திய அரசின் பங்கு ரூ.95,692.31 கோடியாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

9. இந்தியாவில் எபோலா நோய்த் தொற்று இல்லை என மத்திய சுகாதார அமைச்சக அதிகாரிகள் தெரிவித்தனர். காங்கோ குடியரசின் கிழக்கு பகுதிகளில் வேகமாக பரவி வரும் எபோலா தொற்றுப் பாதிப்பால் இதுவரை 131 பேர் உயிரிழந்துள் ளனர்.

10. இந்தியா, இலங்கை உள்பட 13 நாடுகளின் கூட்டு ராணுவப் பயிற்சி மேகாலயத்தில் தொடங்கியது. இதுகுறித்து பாதுகாப்புத் துறையின் மக்கள் தொடர்பு அதிகாரி லெப்டினென்ட் கர்னல் மகேந்தர் ராவத் பிடிஐ செய்தி நிறுவனத்திடம் கூறியதாவது:

(i) மேகாலயத்தின் ரிபோய் மாவட்டத்தில் உள்ள உம்ரோய் ராணுவ நிலையத்தில் 'பிரகதி 2026' என்ற பெயரிலான கூட்டு ராணுவப் பயிற்சி தொடங்கியுள்ளது.

(ii) இந்தியா, பூடான், கம்போடியா, இந்தோனேசியா, லாவோஸ், மலேசியா, மாலத்தீவு, மியான்மர், நேபாளம், பிலிப்பின்ஸ், ஷெசல்ஸ், இலங்கை, வியத்நாம் ஆகிய 13 நாடுகள் இந்தப் பயிற்சியில் ஈடுபடுகின்றன.

(iii) பகுதியளவு மலைப்பாங்கான மற்றும் அடர்ந்த காட்டுப் பகுதிகளில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் கவனம் செலுத்தி, 2 வார காலம் இந்தப் பயிற்சி மேற்கொள்ளப்பட உள்ளது.

(iv) கூட்டுப் பயிற்சி மற்றும் கலாசார பரிமாற்றம் மூலம் பாதுகாப்பு உறவுகளை வலுப்படுத்துவது இந்தப் பயிற்சியின் நோக்கம்.

(v) இந்திய பெருங்கடல் பிராந்தியத்தில் வளர்ச்சி மற்றும் மாற்றத்துக்கான பிராந்திய ராணுவங்களின் கூட்டுறவுதான் சுருக்கமாக பிரகதி என்றழைக்கப்படுகிறது. சமத்துவம், நட்புறவு, பரஸ்பர மரியாதை உணர்வுடன் இந்தப் பயிற்சி நடத்தப்படுகிறது.

(vi) தொழில்முறை சார்ந்த கருத்துப் பரிமாற்றங்களில் ஈடுபடவும், பரஸ்பர அனுபவங்களில் இருந்து கற்றுக்கொள்ளவும், நெருக்கமான ராணுவ உறவுகளை ஏற்படுத்தவும் இந்தப் பயிற்சி வழியமைக்கிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.